மிக மிக அவசரம்

**மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**ந.க.எண்.62அ/ஒபக/2020-21, நாள் :16.02.2021**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டம் (இடைநிலை) – வேலூர் மாவட்டம் – 2020-21ஆம் கல்வியாண்டு அரசுப் பள்ளிகளில் 9 முதல் 12ஆம் வகுப்பு மாணவர்களின் முழு ஆளுமைத்திறனை வளர்த்தல்- திறனறிப் போட்டிகள் நடத்துதல்- Google படிவத்தில் பதிவு செய்யக் கோருதல் – சார்பு

பார்வை: மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.608/C2/SS/2020, நாள்.12.02.2021

-------

பார்வையில் கண்டுள்ள செயல்முறைகளின் படி மத்திய திட்ட ஏற்பளிப்புக்குழு கூட்ட நடவடிக்கை ஒப்புதலின் Quality Intervention(Secondary) என்ற தலைப்பின்கீழ் அரசு பள்ளிகளில் இடைநிலை வகுப்பு பயிலும் மாணவர்களின் முழு ஆளுமைத்திறனை வளர்க்க நடவடிக்கை எடுக்கும் வகையில் Talent Search at School Level எனும் செயல்பாட்டின் மூலம் திறனறிப்போட்டிகள் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 9,10 மற்றும் 11,12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு என தனித்தனியாக கட்டுரை எழுதுதல் / பேச்சுப்போட்டி போன்ற திறனறிப் போட்டிகளை மாணவர்களுக்கு கல்வி மாவட்டம் மற்றும் மாவட்ட அளவில் நடத்திட அறிவுறுத்தப்படுகிறது. தற்போது உள்ள Covid -19 சூழ்நிலை காரணமாக பேச்சுபோட்டி மற்றும் கட்டுரை போட்டிகளை (Online) இணையதள வாயிலாக கல்வி மாவட்டம் மற்றும் மாவட்ட அளவில் நடத்துதல் வேண்டும்.

போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் விவரத்தை இணைப்பில் உள்ள Google படிவத்தில் உடனடியாக இன்றே (16.02.2021க்குள்) பூர்த்தி செய்திடவும், அதன் நகலில் தலைமை ஆசிரியர் கையொப்பமிட்டு மாவட்ட திட்ட அலுவலகத்திற்கு தனிநபர் மூலம் அனுப்பிட அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

16.2.21

மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்(ஒபக)
மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர் –6.

இணைப்பு:-
Excel Format

பெறுநர்:-
அனைத்து அரசு உயர் / மேல்நிலைப்பள்ளி, தலைமையாசிரியர்கள்

நகல்:-
1. முதன்மைக் கல்வி அலுவலர்கள், இராணிப்பேட்டை, திருப்பத்தூர்
2. மாவட்ட கல்வி அலுவலர்கள், அரக்கோணம், இராணிப்பேட்டை, வேலூர், வாணியம்பாடி, திருப்பத்தூர்
3. அலுவலகக் கோப்பு.

Scanned with CamScanner